1979 அக்டோபர் 27]

எதிரில் உள்ள குப்பத்தை இணைக்கும் மரப்பாலம் பற்றியும் கொடுத்திருக்கிறேன். இந்த மூன்றையும் உடனடியாக எடுத்துக் கொண்டால் அந்தப் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் இருக்கும். அந்தத் திட்டதை இந்த ஆண்டா வது செய்வதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் திரு. அரங்கநாதன அவர்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல் கிறேன். நான் தாங்கள் கேட்ட கேள்வியை எடுத்து வரச் சொன்னேன். ''திருவல்லிக்கேணி தொகுதி லாயிட்ஸ் சாலையில் கூவம் ஆற்றுக்குக் குறுக்கே உள்ள'' என்றுதான் கொடுத் திருக்கிறீர்கள். அவ்வாறு எழுதியது தங்கள் தவறுதானே தவிர, அச்சடிக்கப்பட்டதில் தவறு இல்லை. எனவே, எப்பொழுதும் நகலை வைத்துக்கொண்டு பேசுங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: நான் எழுதிய நகல் என்னிடத்தில் இருக்கிறது. அதைக் கொண்டு வந்து தருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இரண்டு பாலத்தை மேம்படுத்தும் செயற்குறிப்பு இப்பொழுது இல்லை.

இராமேஸ்வரம் நகரியம்.

*வினா எண் 12—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராமேஸ்வரம் நகரியத்தை நகரசபையாக மாற்று வது பற்றி அனைத்துக் கட்சியினரும் அரசிடம் கோரிக்கை சமர்ப்பித்துள்ளனர்களா?

(ஆ) ஆம் எனில், அரசு இதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவ ரவர்களே, அந்தப் பரிசீலனை சீக்கிரமாக முடிக்கப்பட்டு, நகர சபையாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, பரிசீலனை முடிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.